**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி.**
**அசல் வழக்கு எண்.158/2016**

2026–ஆம் ஆண்டு மார்ச் மாதம் 09–ம் நாள் திங்கட்கிழமை சாட்சியின் வாக்குமூலம், 2023–ஆம் ஆண்டு பாரதிய சாஷ்சிய அதிநியம் பிரிவுகளின் விதிமுறைகளின்படி திரு. மா. சந்திரமோகன், பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி, அவர்களால் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| தேதி: | 09.03.2026 | | |
| பெயர்: | ரவி<br>(PW2– Cross ) | தகப்பனார் பெயர்: | கிருஷ்ணமூர்த்தி |
| கிராமம்: | சட்டநாதபுரம் | தாலுக்கா: | சீர்காழி |
| தொழில்: | கிராம உதவியாளர் (ஓய்வு) | வயது : | 63/2026 |

**<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை : 09.03.2026</u>**

**(ஆரம்பித்த நேரம்– 12.44)**

1. எனக்கு சாட்சியம் அளிக்க நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை வரவில்லை என்றால் சரிதான். வாதி என்னை சாட்சியம் அளிக்க அழைத்து வந்தாரா என்றால் இல்லை, வாதியின் மகன் மூர்த்தி சாட்சியம் அளிக்க அழைத்து வந்தார். மூர்த்தியும் நீதிமன்றத்திற்கு வந்துள்ளார் என்றால் சரிதான். மூர்த்தியும், நானும் டிரைவர் என்பதால் நெருங்கிய கூட்டாளிகள் என்றால் சரிதான். மூர்த்திக்கும், எனக்கும் சுமார் 30 வருடங்களாக பழக்கம்.

2. வாதி தற்சமயம் வசித்து வருவது திருவாலி கிராமத்தில். மூர்த்திக்கும், எனக்கும் பழக்கம் என்ற அடிப்படையில் நான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரிதான். எனது முதல் விசாரணை வழக்கறிஞர் அலுவலகத்தில் தட்டச்சு செய்யப்பட்டது, நான் கையெழுத்து செய்தேன். எனக்கு சொந்தமாக சொத்துக்கள் கிடையாது என்றால் சரிதான். சட்டநாதபுரத்திற்கும், பூம்புகாருக்கும் இடையில் சுமார் 18 கி.மீ இருக்கும் என்றால் சரிதான்.

3. எனக்கு தற்சமயம் 63 வயது ஆகிறது. நான் பூம்புகாருக்கு பஞ்சாயத்தாரோ அல்லது நாட்டாமையோ கிடையாது என்றால் சரிதான். வாதி மகன் மூர்த்திக்கு சுமார் 45 வயது இருக்கும். வாதி, பிரதிவாதி குடும்பத்தில் பாகப்பிரிவினை ஏற்பட்டபோது யார் யார் இருந்தார்கள் என்றால் சூரக்காட்டை சேர்ந்த முனியன், சட்டநாதபுரத்தை சேர்ந்த சம்பந்தம், காலம் சென்ற சட்டநாதபுரத்தை சேர்ந்த ஜெயராமன் மற்றும் பூம்புகாரைச் சேர்ந்த ஊர் முக்கியஸ்தர்கள் இருந்தார்கள். அவர்கள் பெயர் எனக்கு தெரியாது. நான் முனியனுக்கு டிரைவர் என்ற காரணத்தால் நான் பஞ்சாயத்திற்கு சென்றேன். ஆனால், அவர்கள் என்னை அழைக்கவில்லை. முனியன், ஜெயராமன் ஆகியோர் காலமாகிவிட்டார்கள் என்றால் சரிதான்.

4. முனியன் சீர்காழி ஊராட்சி ஒன்றியத்திற்கு சேர்மன் ஆவார். நாராயணசாமி தம்பி கோவிந்தராஜ் என்பவரை தெரியும். பஞ்சாயத்து எங்கு நடைபெற்றது என்றால் நாராயணசாமியின் பக்கத்து வீட்டில் நடைபெற்றது. சமீபத்தில் அந்த வீட்டை நான் பார்க்கவில்லை என்றால் சரிதான், கடைசியாக பார்த்து சுமார் 5 வருடம் இருக்கும். தற்போது அங்கு என்ன இருக்கிறது என்ற விபரம் தெரியாது. யார் யார் குடியிருக்கிறார்கள், யார் யார் கடை வைத்திருக்கிறார்கள் என்ற விபரமும் தெரியாது. நடைபெற்ற குடும்ப பஞ்சாயத்திற்கு யார் தலைவர் என்றால் சேர்மன் முனியன் ஆவார். பஞ்சாயத்தில் முடிவுகள் பேப்பரில் எழுதப்பட்டது. மேற்படி பஞ்சாயத்து முடிவுகள் 3 தாள்களில் எழுதப்பட்டது. நான் அதில் கையெழுத்து செய்யவில்லை.

5. யார் யார் அதில் கையெழுத்து செய்தார்கள் என்ற விபரம் எனக்கு தெரியாது. அந்த பஞ்சாயத்தில் வீட்டை மூன்றாக பிரித்தார்கள். அந்த வீடு பழைய காலத்து ஓட்டுவீடு. வீட்டின் நீள, அகலம் சுமாராக 60 அடி கிழக்கு, மேற்காக இருக்கும். தெற்கு வடக்காக சுமார் 150 அடி இருக்கும். வீட்டிற்கு கிழக்கில் ரோடு உள்ளது என்றால் சரிதான். அந்த ரோடு மீனவர் காலனிக்கு செல்லக்கூடிய ரோடாகும். தெற்கில் சீர்காழி மெயின்ரோடு உள்ளது. வீட்டின் மேற்கு பக்கத்தில் யார் இருக்கிறார்கள் என்ற விபரம் எனக்கு தெரியாது. வீட்டின் வடக்கில்

காலிமனை உள்ளது. காலிமனைக்கு வடக்கில் யார் இருக்கிறார்கள் என்று எனக்கு தெரியாது.

6. வீடு மற்றும் மனையை மூன்றாக பிரித்து கொண்டார்கள் என்றால் சரிதான். அவரவர்கள் பாகத்திற்கு காம்பவுண்ட் சுவர் வைத்துள்ளார்களா என்றால் இல்லை. பஞ்சாயத்து நடைபெற்ற தேதி, மாதம் ஞாபகம் இல்லை. ஆனால், வருடம் 1988 ஆகும். நான் ஓட்டுநர் உரிமம் 1985 ம் வருடம் எடுத்தேன். தாவா சொத்தின் சர்வே எண்.385/23A ஆகும். எனது வீட்டு சர்வே எண்.546/11. பஞ்சாயத்து நடந்த சமயத்தில் சர்வேயர் வைத்து அளக்கவில்லை. வாதியின் மகன் எனது நெருங்கிய கூட்டாளி என்பதால் வாதிக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. பெரியவர் நாராயணசாமிக்கு மேற்கில் 14 ½ குழி ஒதுக்கினார்கள். கோவிந்தராஜ்க்கு 10 குழி ஒதுக்கப்பட்டது. வீட்டின் கிழக்கு வாதி கோபாலகிருஷ்ணனுக்கு 17 ½ குழி ஒதுக்கப்பட்டது.

7. பஞ்சாயத்து நடந்தது சம்பந்தமான ஆவணங்கள் நான் பார்க்கவில்லை என்றால் இப்போது பார்க்கவில்லை. கோவிந்தராஜ் அவரது பாகத்தை ராமதாஸ் என்பவரிடம் சுமார் 25 வருடங்களுக்கு முன்பு விற்பனை செய்துவிட்டார். வாதி கோபாலகிருஷ்ணன் அவருடைய பாகத்தை விற்பனை செய்துவிட்டாரா என்றால் வீட்டின் பின்புறமுள்ள காலிமனையை விற்பனை செய்தார். எந்த வருடம் என்று ஞாபகம் இல்லை. யாரிடம் விற்பனை செய்தார் என்ற விபரம் எனக்கு தெரியாது. வாதி திருவாலி கிராமத்திற்கு எந்த வருடம் வந்தார் என்று எனக்கு தெரியாது. இந்த வழக்கு பாகப்பரிவினைக்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வேறு எதுவும் எனக்கு தெரியாது. வாதி பிரதிவாதியின் மேல் ஆக்கிரமிப்பு செய்து கட்டிடம் கட்டியதாக வழக்கு தாக்கல் செய்துள்ளார். வீட்டின் கிழக்கு பகுதியில் கணேசன் இடித்துவிட்டு கட்டியதாக வழக்கு தாக்கல் செய்துள்ளார். எந்த வருடம் இடித்து கட்டினார் என்று தெரியாது.

8. எனக்கு வழக்கு, சொத்தைப்பற்றி எதுவும் தெரியாது என்றால் சரியல்ல. வாதியின் மகன் எனக்கு கூட்டாளி என்பதால் பூம்புகாரில் உள்ள நபர்களை

சாட்சியமாக அழைக்காமல் என்னை சாட்சியமாக அழைத்துள்ளார் என்றால் சரியல்ல. முனியன் தலைமையில் பஞ்சாயத்து நடக்கவில்லை என்றால் சரியல்ல. முனியன் வேறு சமுதாயத்தை சார்ந்தவர், வாதி, பிரதிவாதி வேறு சமுதாயத்தை சார்ந்தவர்கள் என்பதால் முனியன் தலைமையில் பஞ்சாயத்து நடக்கவில்லை என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளப்படுகிறது.**

**மறு விசாரணை இல்லை.**

**(முடிவு நேரம்–13.17)**